## பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 51-2020*

**இவ்வாண்டு பல இன்னல்களுக்கு மத்தியிலும்...**

- எமது பிள்ளைகளுக்குக் கல்வி தடைப்படவிடமாட்டோம் என சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்களுக்கும்,
- எந்த நிலையிலும் நாம் கேட்டபோதெல்லாம் எமக்குத் தோள்கொடுத்துதவிய பெற்றோர்குழுவினர் மற்றும் வகுப்புப்பிரதிநிதிகளுக்கும்,
- நேரடியாகப் பாடசாலை நடாத்தியவேளை தேவைக்கேற்ப ஆசிரியர்களையும் நிர்வாகவுறுப்பினர்களையும் மற்றும் அங்கு பணியாற்றியவர்களையும் சோர்ந்துபோகவிடாமல் தேனீர் வழங்கி ஊக்கமளித்த தேனீர்ச்சாலைக் குழுவினருக்கும்,
- வளாகத்தின் நலன்கருதி பல நற்கருத்துக்களை எம்மோடு பகிர்ந்துகொண்ட வளாக நலன்விரும்பிகளுக்கும்,
- வளாகத்தில் அனைத்துவிடையமும் சிறப்பாக நடாத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய வழங்கிக்கொண்டிருக்கும் பெற்றோர் அனைவருக்கும்,
- நாம் நேரடியாகப் பாடசாலை நடாத்துவதற்கு இடம் கிடைக்குமா? இல்லையா என்ற ஐயப்பாட்டில் இருந்தபோது தமிழர் கட்டடத்தில் எமக்காகவும் இடம் ஒதுக்கி வழிவகுத்துத்தந்த தமிழர் வள ஆலோசனை மையத்தினருக்கும்,
- நேரடியாக வகுப்புகள் நடாத்தமுடியாவிட்டாலும் எமது மாணவர்களின் கல்விக்கு தடைவரவிடமாட்டோம் என இணையவழியில் கல்வியை வழங்க வழிவகுத்த அன்னை தலைமைக்கும்

*நன்றியைத்தெரிவிப்பதோடு*

***''நத்தார் புதுவருட நல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்''***

## கல்வி

அரையாண்டுத்தேர்வுகள் 2020 மாணவர்களுக்கு இணையவழியினூடாக சிறப்பாக நடைபெற்றது.

திட்டமிடல் நாள்: 02.01.2021
தவணை ஆரம்பம்: 09.01.2021

**அன்னை தமிழ்முற்றக்குழுவினரால் நடாத்தப்படவிருக்கும் நிகழ்வுகள் 2021**

மாணவர்களுக்கான விண்ணப்பப்படிவம் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.
தங்கள் பிள்ளைகளுக்கு ஊக்கம் கொடுத்து பங்குபெறவைக்கவேண்டுமென கேட்டுக்கொள்கின்றோம்.

## கலைவகுப்புகள்

கலைவகுப்புகளுக்கான கட்டணத்துக்குரிய விபரங்கள் குறுந்தகவலில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## கட்டணம் 2020

இவ்வாண்டுக்குரிய கட்டணங்கள் அனைத்தையும் விரைவில் செலுத்தும்படி தாழ்மையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

***குறிப்பு:*** இத்தவணையில் மூன்று பிள்ளைகளுக்கான கட்டணம் 2000,- இற்குப் பதிலாக 2100,- என அனுப்பப்பட்டுள்ளது. அதனைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். அதற்கான கழிவினை நாம் அடுத்த தவணைக்கான கட்டணத்தில் மேற்கொள்வோமென உறுதியளிக்கின்றோம். புரிதலுக்கு நன்றி.

## நிருவாகத்தெரிவுக்குழுவின் தகவல்

புதிதாக இணையவிரும்புவபர்கள் விரைவில் தங்களைப்பற்றிய அறிமுகத்துடன் மின்னஞ்சலினூடாக தெரிவுக்குழுவினருக்கு நேரடியாக 31.12.2020 இற்கு முன்னதாக அனுப்பிவையுங்கள்.

*தெரிவுக்குழுவினரின் விபரம்*

திரு. சுரேஸ் முருகேசு, m.sures@hotmail.com

திரு. அரவிந்தன் இராமகிருஷ்ணன், aravinthan21st@gmail.com

திருமதி. சர்மிளா அரவிந்தன் sharmilaa@annai.no

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

நன்றி!

நிர்வாகம்
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

**நாம் தமிழர்!**

**தமிழை வளர்க்கப்**

**பணிபுரிவோம்!**